Cr.Misc.39

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, THANJAVUR

S.C.No.389/2025

Dated 15-12-2025
Deposition of witness for : PW 1

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | துரைமுருகன் | வயது | : | 39 |
| தந்தை பெயர் | : | லோகநாதன் | தாலுக்கா | : | தஞ்சாவூர் |
| கிராமம் | : | மாதாகோட்டை | தொழில் | : | ஈ சேவா மைய ஊழியர் |

Solemnly affirmed by Thiru.A.Ekambaram, Grade-1 Bench Clerk, of this court in accordance with the provisions of Act X of 1873.

**Accused present**

Ld. D. **Counsel Present**

**As per the Circular of the Hon'ble High Court, Madras in ROC No. 74663/2024 /F1/dt.21.2.2025 the Identity of the witness verified with their Identity card.**

**Aathar card of the Witness verified.**

சாட்சியானவர் நீதிமன்ற அழைப்பாணையின் பேரில் வருகை புரிந்து அவருக்கு சத்தியபிரமாணம் செய்யப்பட்டு முதல் விசாரணை:

1) நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடும்பத்துடன் வசித்து வருகிறேன். ஈ சேவா மையத்தில் டேட்டா எண்ட்ரியாளராக வேலைபார்க்கிறேன்.

2) ஆஜர் எதிரியை தெரியும். இறந்துபோன திருவேங்கடம் என் அண்ணன் ஆவார்.

3) கடந்த 6.7.2025 ம் தேதி இரவு நேரம் தெரியவில்லை. நான் அப்போது மாதாக்கோட்டையில்

உள்ள வீட்டில் இருந்தேன். என் அண்ணன் திருவேங்கடம் கணபதி நகரில் உள்ள எங்கள் பூர்விக வீடான என் அப்பா அம்மாவுக்கு சொந்தமான வீட்டில் இறந்துவிட்டதாக எனக்கு காவல்நிலையத்தில் இருந்து தகவல் வந்தது. நான் மாதாக்கோட்டையில் இருந்து கணபதி நகர் சென்று வீட்டில் போய் பார்த்தபோது என் அண்ணன் திருவேங்கடம் இறந்துகிடந்தார். அவர் எப்படி இறந்தார் என்று எனக்கு தெரியாது.

4) என் அண்ணன் திருவேங்கடத்தை போய் பார்த்தபோது அவர் பேசும் நிலையில் இல்லை.

5) என் அண்ணனை 108 ஆம்புலன்ஸ் மூலமாக தஞ்சாவூர் மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் சிகிச்சைக்கு சேர்த்தபோது அங்குள்ள மருத்துவர் பரிசோதித்து விட்டு இறந்துவிட்டதாக கூறினார்கள்.

6) என்னிடம் காட்டப்படும் புகாரை நான்தான் எழுதினேன். அதில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அந்த புகார் அ.சா.ஆ.1 ஆகும்.

எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1) நான் கையெழுத்து போடும் போது அ.சா.ஆ.1 ல் எதுவும் எழுதபடாமல் இருந்தது என்றால் சரிதான்.

/உண்மை நகல்/

ஒம்/-P.வேல்முருகன்
முதன்மை மாவட்ட நீதிபதி
தஞ்சாவூர்